FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2023 செப்டம்பர்

Vol. 03 - தொகுதி 09


ரம்ஸி ராசிக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை


இந்திக தொடவத்த கைது


பிரகீத் காணமல் ஆக்கப்பட்டு 5000 நாள் நிறைவடைந்துள்ளது

ஊடக சுதந்திரம் குறித்து செப்டம்பர் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 18 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் செப்டம்பர் 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 02 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 13 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 03 சம்பவம் என மொத்தம் 18 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## செப்டம்பர் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

01. ஜனாதிபதிக்கு எதிராகச் சமூக ஊடகத்தில் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் எப்பாவல பிரதேசத்தில் 19 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

02. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டதன் 5,000ஆவது நாளை நினைவுகூரும் வகையில் விசேட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.

03. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான புதிய வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அந்த வரைவு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

04. நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை.

05. மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்து வெளியிட்ட பிரபல ஜோதிடர் இந்திக்க தொடவத்த கைது செய்யப்பட்டமை.

06. ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி ஒருவர் பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக குறிப்பிட்டு வெளியிட்ட கடிதத்தை விமானப்படை அதிகாரிகள் மீளப்பெற்றுள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளமை.

07. இழப்பீட்டுடன் செய்தி மாநாட்டில் ஊடுருவல் சம்பந்தப்பட்ட வழக்கு முடிவுக்கு வந்தது.

08. பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

09. சமூக ஊடகத்தில் கருத்து பதிவிட்ட காரணத்தினால் ICCPR சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ரம்சி ராசிக் விடுவிக்கப்பட்டமை.

10. இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்திக் கட்டுரைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தாக்கல் செய்திருந்த வழக்கு முடிவுக்கு வந்தமை.

11. திருகோணமலையில் "திலீபன்" நினைவேந்தல் ஊர்வலத்தின் மீது இடையூறு விளைவிக்கும் குழுவொன்று தாக்குதல் நடத்தியமை.

12. கொழும்பில் திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்கு இரு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன.

13. திலீபனின் நினைவேந்தலை தடை செய்யுமாறு பொலிஸாரின் இரண்டு கோரிக்கைகளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

14. திருகோணமலையில் நடைபெறவிருந்த திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் பலவற்றை தடுக்கும் வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தமை.

15. பொத்துவிலிலிருந்து யாழ்ப்பாணம் வரை வவுனியா நகருக்குச் செல்லும் திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தை நிறுத்துமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

16. இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செய்தியின் மூலம் தனக்கு அவதூறு ஏற்பட்டதாககூறி நீதி அமைச்சர் 500 மில்லியன் இழப்பீடு கோரியுள்ளார்.

17. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் குறித்து ஆசிய இணைய கூட்டமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

18. வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் பாதுகாப்பு நிலைபற்றிய ஆன்லைன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 செப்டம்பர் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 02 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 13 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 |
| **மொத்தம்** | **18** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் செப்டம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 02 சம்பவங்கள் செப்டம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. சில சம்பவங்கள் சட்ட நிபந்தனைகள் தொடர்பானவை என்பதனால் குறித்த சம்பவங்கள் அந்தத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அட்டவணை 2: 2023 செப்டம்பர் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 02**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இடையூறு விளைவித்தல் / சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் | 01 |
| உளவியல் ரீதியான பாதிப்புக்கள் | 01 |
| **மொத்தம்** | **02** |

01. **திருகோணமலையில் "திலீபன்" நினைவேந்தல் ஊர்வலத்தின் மீது இடையூறு விளைவிக்கும் குழுவொன்று தாக்குதல் நடத்தியமை.**

கடந்த ஒக்டோபர் 17ஆம் திகதி, 36 வருடங்களுக்கு முன்னர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட திலீபனை நினைவுகூரும் வகையில் பொத்துவிலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற வாகன அணிவகுப்பு திருகோணமலை சர்தாபுர சந்திக்கு அருகில் வைத்துத் தாக்கப்பட்டது. சம்பவத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் தாக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலைத் தடுக்க காவல்துறை தலையிடவில்லை என்று குறித்த சம்பவத்தை அறிக்கையிட்ட ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனையடுத்து, தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ஆதாரம்: bbc.com

02. **இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செய்தியின் மூலம் தனக்கு அவதூறு ஏற்பட்டதாககூறி நீதி அமைச்சர் 500 மில்லியன் இழப்பீடு கோரியுள்ளார்.**

Nationalalert.lk இணையத்தளத்தின் ஆசிரியர் கீர்த்தி ரத்நாயக்கவுக்கு எதிராக nationalalert.lk சமூக ஊடக வலையமைப்பினூடாக அவதூறான செய்திகளை வெளியிட்டமைக்காக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது சட்டத்தரணிகள் ஊடாக இடைக்கால மேன்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். குறித்த செய்தி பிரசுரத்தினால் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் நற்பெயருக்கு ஏற்பட்ட பாதிப்பு காரணமாக 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: theleader.lk

## சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**பத்திரிகை சுதந்திரம் தொடர்பான சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகளின் கீழ் செப்டம்பர் மாதத்தில் 13 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் இதில் அடங்கும். அரசாங்கத்தால் திணிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் புதிய சட்டங்களின் இரண்டு வரைவுகளை வெளியிடுவது மற்றும் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட எதிர்வினைகள், மற்றும் ஒரு நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் பல பிரதேச நீதிமன்றங்களில் கிடைத்த தீர்வுகள் இங்குக் குறிப்பாகக் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளது. ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கில் ரம்சி ராசிக் விடுவிக்கப்பட்டதன் நேர்மறையான வளர்ச்சி, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை எடுத்துக்காட்டுகிறது, இந்தத் தீர்பானது கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்துவதில் முன்னேற்றத்தைக் குறித்து நிற்கின்றது.**

**அட்டவணை 03 – 2023 செப்டம்பர்: சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்– 13 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 10 |
| சட்ட சீர்திருத்தங்கள் | 02 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருதல் | 01 |
| **மொத்தம்** | **13** |

01. **ஜனாதிபதிக்கு எதிராகச் சமூக ஊடகத்தில் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் எப்பாவல பிரதேசத்தில் 19 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

"எப்பாவல பிரதேசத்தில் நிகழ்வொன்றிற்கு வருகை தரும் நாட்டின் மிகப்பெரும் திருடனை சுடுவதற்கு ஸ்னைப்பர் ஆயுதம் தேவை' என அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இது ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் எனக் கருதி குற்றப்புலனாய்வு பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். உதித் மதுபாஷன என்ற சந்தேக நபர் செப்டம்பர் 3 ஆம் திகதி எப்பாவல பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார். கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆதாரம்: theleader.lk

02. **ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டதன் 5,000ஆவது நாளை நினைவுகூரும் வகையில் விசேட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.**

2010 இல் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் நீதிக்கான தேடலைப் பிரதிபலிக்கும் நினைவுச்சின்னங்கள், கார்ட்டூன்கள் மற்றும் கலைப்படைப்புகளை காட்சிப்படுத்தும் கண்காட்சி அக்டோபர்

4 ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது. சந்தியா எக்னலிகொட, தனது கணவரின் நீதிக்காக அயராது செயல்பட்டார், பன்னிபிட்டியவில் உள்ள அவரது இல்லத்தில் இந்த நினைவு நாளை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதை எடுத்துக்காட்டும் வகையில், ஊடகவியலாளர் காணாமல் போனமை இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிடப்பட்டதாக விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஆதாரம்: youtube.com

**03. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான புதிய வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அந்த வரைவு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.**

நீதியமைச்சரால் முன்மொழியப்பட்ட வரைவுக்கு செப்டம்பர் 4 ஆம் தேதி அமைச்சரவை வழங்கியுள்ளதுடன் செப்டம்பர் 15 ஆம் தேதி வர்த்தமானியில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. முன்னதாக, இந்த ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவு, கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள்மீதான அதன் தாக்கம்குறித்த விமர்சனத்தைத் தொடர்ந்து பின்வாங்கப்பட்டது. அந்த விமர்சனங்களில் சிலதை நிவர்த்தி செய்யும் வகையில் திருத்தங்களைச் மேற்கொண்டபின்னர் அந்த வரைவு மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: sinhala.adaderana.lk , bbc.com

**04. நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் செப்டம்பர் 4 ஆம் திகதி அமைச்சரவையில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் செப்டம்பர் 18 ஆம் தேதி வர்த்தமானியில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இணையத்தில் தவறான தகவல்களைப் பரப்புதல் மற்றும் தீங்கிழைக்கும் சூழ்ச்சிகளால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சரவை அலுவலகம் தெரிவித்துள்ளது. எனினும், இது கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் சட்டம் என மனித உரிமை ஆர்வலர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

ஆதாரம்: bbc.com

**05. மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்து வெளியிட்ட பிரபல ஜோதிடர் இந்திக்க தொடவத்த கைது செய்யப்பட்டமை.**

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளி தொடர்பில் முறைப்பாடுகள் எழுந்ததையடுத்து, இந்திக தொட்டவத்தவை செப்டம்பர் 06 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டது. வாக்குமூலம் வழங்கியபின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அன்றைய தினம் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர், எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குறித்த காணொளிமூலம் நபிகள் நாயகம் அவர்களுக்கு அவதூறு பரப்பட்டதாகக் குற்றம்சாற்றி 12 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். கணினி குற்றச் சட்டம், காவல்துறை கட்டளைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் பிரிவுகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

ஆதாரம்: facebook.com , facebook.com

**06. ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி ஒருவர் பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக குறிப்பிட்டு வெளியிட்ட கடிதத்தை விமானப்படை அதிகாரிகள் மீளப்பெற்றுள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளமை.**

நியாயமான காரணமின்றி தன்னை கறுப்புப் பட்டியலில் சேர்த்த விமானப்படைத் தளபதியின் தீர்மானத்திற்கு எதிராக ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் சஞ்சீவ துய்யகொண்டவினால் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு செப்.07ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார். இந்த மனுவில் பிரதிவாதிகளாக விமானப்படைத் தளபதி, இலங்கை விமானப்படையின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகளான யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கு மீண்டும் அக்டோபர் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: island.lk

**07. இழப்பீட்டுடன் செய்தி மாநாட்டில் ஊடுருவல் சம்பந்தப்பட்ட வழக்கு முடிவுக்கு வந்தது.**

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் உட்பட மூன்று பிக்குகள் சம்பந்தப்பட்ட இந்த வழக்குக் கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 9 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் வட்டரெக விஜித தேரர் மற்றும் முஸ்லிம் மௌலவிகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பைச் சட்டவிரோதமான முறையில் இடையூறு விளைவித்தமை மற்றும் குற்றவியல் நிர்ப்பந்தம் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர்கள்மீது தொடுக்கப்பட்டிருந்தன. செப்டம்பர் 11ஆம் திகதி நடந்த விசாரணையின்போது, குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். வட்டரக விஜித தேரர் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மூன்று இலட்சம் ரூபா நட்டஈடு செலுத்தி வழக்கைத் தீர்ப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. பிரதிவாதிகள் பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் எச்சரிக்கையைப் பெற்றனர்.

ஆதாரம்: theleader.lk

**08. சமூக ஊடகத்தில் கருத்து பதிவிட்ட காரணத்தினால் ICCPR சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ரம்சி ராசிக் விடுவிக்கப்பட்டமை.**

2020 ஏப்ரலில் சமூக ஊடகத்தில் பதிவொன்று இட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ரம்சி ராசிக் கைது செய்யப்பட்டார், மேலும் அவர் ஐந்து மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச

உடன்படிக்கையின் கீழ் (ICCPR) அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு செப்டம்பர் 21 ஆம் திகதி அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவருக்கு எதிராக எந்த வித ஆதாரமும் முன்வைக்கபடாத காரணத்தால் அளுத்கடை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

ஆதாரம்: bbc.com

09. **இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்திக் கட்டுரைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தாக்கல் செய்திருந்த வழக்கு முடிவுக்கு வந்தமை.**

நாடாளுமன்ற உறுப்பினர் தனது மனைவிக்கு ரேஞ்ச் ரோவர் ரக காரை வாங்கியதாக 2021ஆம் ஆண்டு இணையத்தளமொன்றில் வெளியிடப்பட்ட பொய்யான செய்தியினால் ஏற்பட்ட அவதூறுக்காக நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட இணையதளம் நீதிமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜனசுமனவிடம் மன்னிப்பு கேட்டதன் காரணமாகக் குறித்த வழக்கு முடிவுக்கு வந்தது.

ஆதாரம்: facebook.com

10. **கொழும்பில் திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்கு இரு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன.**

செப்டெம்பர் 19 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றமும் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றமும் கொழும்பில் உள்ள பல்வேறு பொலிஸ் அதிகார எல்லைகளில் “திலீபன் நினைவேந்தல்களை“ தடைசெய்து உத்தரவுகளைப் பிறப்பித்தன. கோட்டை பொலிஸாரின் கோரிக்கையை அடுத்து, கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம் (CSM) மற்றும் தந்தை மாரிமுத்து சத்திவேல் உட்பட நினைவேந்தல்களில் பங்கேற்க எதிர்பார்த்த அனைத்து நபர்களுக்கும் எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: island.lk

11. **திலீபனின் நினைவேந்தலை தடை செய்யுமாறு பொலிஸாரின் இரண்டு கோரிக்கைகளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

யாழ்ப்பாணம் நல்லூரில் செப்டெம்பர் 26 ஆம் திகதி திட்டமிடப்பட்ட திலீபன் நினைவேந்தலை தடை செய்யுமாறு யாழ்ப்பாண பொலிஸாரின் கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் செப்டம்பர் 20 ஆம் திகதி நிராகரித்தது. மீண்டும், செப்டம்பர் 22ம் திகதி, தடை உத்தரவு கோரி போலீசார் மீண்டும் கோரிக்கை வைத்தனர், ஆனால் இந்தக் கோரிக்கையும் 26ம் திகதி நிராகரிக்கப்பட்டது. தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை மீறும் வகையில் தடை உத்தரவு பிறப்பிப்பது தேவையற்றது என மாஜிஸ்திரேட் கூறினார். மாறாக வன்முறை அல்லது குற்றச் செயல்கள் நடந்தால், குற்றவாளிகள்மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கலாமென மாஜிஸ்திரேட் நீதவான் மேலும் குறிப்பிட்டார்.

ஆதாரம்: tamilguardian.com, twitter.com

12. **திருகோணமலையில் நடைபெறவிருந்த திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் பலவற்றை தடுக்கும் வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தமை.**

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவு மற்றும் திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளக்கோட்டன் மண்டபம் மற்றும் காந்தி சுற்றுவட்டத்தில் கொண்டாட்டங்கள், அணிவகுப்பு அல்லது ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்யத் தடை விதித்து திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் செப்டம்பர் 26 அன்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார். திருகோணமலை மாவட்ட தமிழ் ஜனதா சங்கத் தலைவர் ஆர்.எப்.ஜெரோம் உள்ளிட்ட சிலருக்கு எதிராகப் பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: island.lk

13. **பொத்துவிலிலிருந்து யாழ்ப்பாணம் வரை வவுனியா நகருக்குச் செல்லும் திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தை நிறுத்துமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

இந்த நினைவேந்தல் ஆனது "இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்" என்று இருவர் அளித்த புகாரின் அடிப்படையில் செப்டம்பர் 19ஆம் திகதி காவல்துறை இந்தத் தடை உத்தரவைக் கோரியது. நினைவேந்தல் மேற்கொள்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு எனத் தெரிவித்த நீதவான், கடந்த 17ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்றது போன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாத வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஆதாரம்: tamilguardian.com

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**‘கட்டமைப்புரீதியான விதிமுறைகள்“ ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. “கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு“ என்ற குறிகாட்டியின் கீழ் மூன்று சம்பவங்கள் இதில் அடங்கும்.**

**அட்டவணை 04–2023 செப்டம்பர் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 03 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| **மொத்தம்** | **03** |

01. **பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.**

செப்டெம்பர் 23 அன்று நடைபெற்ற கூட்டத்தில், வர்த்தமானியில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட இரண்டு வரைவுகளும் மனித சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்குக் கணிசமான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அந்த அமைப்பு முடிவு செய்தது. இந்த வரைவுகளை திரும்பப் பெற வேண்டும் என்று அந்த அமைப்பு அரசை வலியுறுத்துகிறது. இந்தச் சட்டமூலங்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த தரப்பினருடன் கலந்தாலோசிக்காமல் வகுக்கப்பட்டுள்ளதாகச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆதாரம்: [basl.lk](basl.lk)

02. **நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் குறித்து ஆசிய இணைய கூட்டமைப்பு கவலை தெரிவித்துள்ளது.**

செப்டம்பர் 28 ஆம் திகதி அன்று, ஆசிய இணையக் கூட்டமைப்பு (Asia Internet Coalition) அரசாங்கம் முன்வைத்த சட்டமூலம் குறித்து கவலை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. எந்தவொரு பங்குதாரர்களையும் கலந்தாலோசிக்காமல் முன்வைக்கப்பட்ட இந்தச் சட்டமூலம், கருத்து வேறுபாடுகளை நசுக்கும் கடுமையான முறைமையையும், இலங்கையர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையையும் மீறுவதாகக் குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆப்பிள், அமேசான், கூகுள், X, Meta, LinkedIn உள்ளிட்ட ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள முன்னணி இணைய சேவை வழங்குநர்களின் உள்ளடக்கிய கூட்டமைப்பே இந்த அமைப்பாகும்.

ஆதாரம்: [newsfirst.lk](newsfirst.lk)

03. **வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் பாதுகாப்பு நிலைபற்றிய ஆன்லைன் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.**

இந்தச் சட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் அதன் தாக்கம் என்ற கருப்பொருளில் செப்டம்பர் 26 ஆம் திகதி அன்று “ஹேஷ்டாக் தலைமுறை“ இந்த உரையாடலை ஏற்பாடு செய்தது. ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், Hashtag தலைமுறையின் பிரதிநிதியாகச் சரிதா இருகல்பண்டார, இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தரிந்து ஜயவர்தன ஆகியோர் கருத்துத் தெரிவித்ததுடன், ஹர்ஷன துஷார சில்வா உரையாடலை நெறிப்படுத்தினார்.

ஆதாரம்: [facebook.com](facebook.com)

---

**அட்டவணை 5 : ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி–ஆகஸ்ட் | | 2023 செப்டம்பர் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிபோக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 32 | - | 02 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 53 | 20 | 13 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழிற்முறையியம் | 05 | - | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 24 | - | 03 |
| **மொத்தம்** | **103** | **20** | **18** |

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener: Hana Ibrahim +94 77 741 2995 | Secretary: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620
Treasurer: Thaha Muzammil +94 77 3741026 | Assistant Secretary: Priyadarshani Sivaraja +94 772530258
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: Nalinda Seneviratne